Registered as a News Paper in Ceylon

P. M. G. No. H. A. 59,300 of 1953.

# இந்துசாதனம்

விரோதி ௵ (1889) ஆவணி ௴ 28உ ஆரம்பமான

வெள்ளி தோறும் வெளிவருவது

தனிப்பிரதி: சதம் 10

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - சூஅ] யாழ்ப்பாணம்:- துன்முகி ௵ ஆனி ௴ உ௩உ வெள்ளிக்கிழமை (6 JULY 1956) [இல - கஅ]

# ஆதி இலங்கை மக்களும் அரசரும் தமிழரே

---------0—0---------

## அரசாங்க மொழியும் தமிழேயன்றிச் சிங்களமல்ல

---------0---------

### மக்கள் ஒன்றுபட்டு மொழிக்கும் இனத்துக்கும் விடுதலை பெறுக

### சுவாமி தனிநாயகம் அவர்களின் அறிவுசான்ற அழைப்பு

திருக்கோணமலை ஆசிரிய சங்கக் கூட்டமொன்று திருக்கோணமலை இந்துக்கல்லூரியில் நடைபெற்றது. "தமிழர் பண்பாடு" என்பதுபற்றி வண. சுவாமி தனிநாயகம் அவர்கள் பேசினர்.

அவர் பேசும்போது: "முன்னொரு காலத்தில் பெருமையுடன் உரிமையுடன், பெரும் புகழுடன் ஒன்றுபட்டிருந்த தமிழ்ச் சமுதாயத்தினர் இமயம் வரை சென்றார்கள். வெற்றிக்கொடி நாட்டினர்கள். இது இன்றைக்குச் சாத்தியமில்லை என்று கூறமுடியாது. இமயத்தில் மட்டுமல்ல, எவரெஸ்ட் சிகரத்திலும் தமிழர் கொடியேற்ற முடியும். ஆனல் சிதறுண்டு சோழிந்து தனித்தனியாகப் பிரிந்து கிடக்கும் தமிழ் மக்கள் தமிழ்த்தாயின் விடுதலைக்காக, தமிழ்மொழியின் விடுதலைக்காக கலை, கலாச்சாரம், பண்பாட்டின் விடுதலைக்காகஒன்றுபடவேண்டும். அன்றைய பெருமைக்கு நம் ஒற்றுமைதான் காரணமாக இருந்தது இன்றைய இழிநிலைக்கு ஒற்றுமை யின்மைதான் காரணம்.

விஜயனின் கருத்திலே, கற்பனையிலே இலங்கை தென்படாத காலத்தில் பெருங்குடித் தமிழ் மக்கள் இங்கு பெருமையுடன் வாழ்ந்தார்கள் என்பதை,சமீபத்தில்கூட புதைபொருள் நிரூபித்து விட்டது. சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால் இங்கே ஆதியில் முதன் முதலாகக் குடியேறியவர்களும் தமிழர்; அரசாண்டவரகளும் தமிழர் என்பதை அறிய முடியும்

பண்பும் பெருமையும் நிறைந்த தமிழ்மொழி, சிங்களமொழி கலை, கலாச்சாரத்துக்கு மட்டுமன்றி இன்னும் எத்தனையோ உலக மொழிகள் கலைகள், கலாச்சாரங்களுக்கு உயிர்கொடுத்திருக்கிறது; இன்றும் உயிர் அளித்திருக்கிறது. தமிழர் பண்பாட்டைத் தவறில்லாத வகையில் எத்தனையோ பௌத்த நூல்களில் படிக்கலாம்' புத்த மித்திரர் எழுதிய பல நூல்களிலும், மகாவம்ச என்ற நூலிலும் தமிழ் இனத்தின் சிறப்பைப் பொதுவாகவும்,தமிழரசன் எல்லாளனின்மகிமையைக் குறிப்பாகவும் எழுதியிருப்பதைக் காணமுடியும். கடந்த காலத்தில் பல இலக்கிய மேதைகளால் எழுதப்பட்ட தமிழ் இலக்கியங்கள் வடநாட்டுக்கும், தென்னாட்டுக்குமுள்ள தொடர்பைச் சித்தரிக்கின்றன. ஏனெனில் இருநாட்டாரும் எம் மொழியிலேயே இலக்கியங்களை எழுதினர்கள்.

பகுத்தறிவற்ற சில சிங்களத் தலைவர்கள் அந்நிய ஆட்சிக்கு முன்னர் சிங்கள மொழி அரசியல் மொழியாக இருந்ததென்று கூறுவது பெரும் விந்தையே. காரணம் அந்தக் காலத்தில் எந்தமொழி அரசியல் மொழியென்பது பிரச்னை யாயிருக்கவில்லை. மேலும் இராத ரட்சகர் என்னும் முற்காலச் சிங்களப் பிரதமர் தமிழ் மொழியிற்றான் உறுதிமொழி கூறினர் என்றால் தமிழின் சிறப்பு எப்படி இருந்த தெனபதை நாம் உணரலாம். இது நான் கூறுவதல்ல, சரித்திரம் கூறுகின்றது.

கதவுகளை இறுக மூடி வைத்துச் சாமம்சாமமாகச் சட்டங்களை இயற்றி விட்டால் அதை சனநாயக தர்மம் என்று கூறமுடியாது. அதிகாரத்தில் இருக்க வேண்டுமென்ற காரணத்தால் சிங்களத்தை அரசமொழியாக்கிவிட்டு ஆட்சியாளர் அர்த்தமற்ற வியாக்கியானம் செய்கின்றனர். 70 வீதம் சிங்களவரும், 10 வீதம் தமிழரும் வாழ்வதாகக் கூறியிருப்பதுடன இங்குள்ள பறங்கியர், மலாயர், இஸ்லாமியர், மற்றும் சமுதாயத்தினர் ஆதரவளித்தமையால் சிங்களத்தைஅரசமொழியாக்கி விட்டதாகப் பிரதமர் இலண்டனில்பேசினர். இங்கிலையில் 69 வீதம் சிங்களம் பேசும் மக்கள் வாழும் இந்நாட்டில் 26 வீதம் தமிழ்ப்பேசும் மக்கள் வாழ்கின்றார்கள் என்னும் உண்மையைப் பிரதமர் மறைத்து மழுப்பி விட்டார்.

சிங்களத்தை மட்டும் உத்தியோக மொழியாக்குவதற்கு உணவு மந்திரி அளிக்கும் வியாக்கியானம் விசித்திரமானதாக இருக்கிறது. 25 சிறு சிறு இனங்கள் வாழக்கூடிய அமெரிக்காவிலே ஒரு மொழிதான் இராசாங்க மொழியாக இருக்கிறதென்று அவர் கூறுகிறார். ஆனல் நான்கு வீதம் இத்தாலியரும், 22 வீதம் பிரஞ்சுக்காரரும் வாழும் சுவிஸ் நாட்டிலே இத்தாலியும், பிரஞ்சு மொழியும் சமநிலை பெற்று இருக்கின்றன. பெல்ஜியத்திலே பிரஞ்சும், பிலமின மொழியும் சமநிலை பெற்றிருக்கின்றன. மற்றும் 21 கோடி மக்கள் வாழும் சோவியத் நாட்டிலே 14 மொழிகளும், அண்டையிலிருக்கும் பாக்கிஸ்தானிலே உருதும் வங்காளியும்; 1 கோடி 14 லட்சம் பேரு

தொடர்ச்சி 5ம் பக்கம்

## கல்லோயாக்காரர் மகாநாடு

கல்லோயாவிற் குடியேறியிருந்து அணிமையில் நடந்த கொடுமைகள் காரணமாக வெளியேறியவர்களின் மகாநாடொன்று கல்லாற்றில் ஸ்ரீ பிரான்சிஸ் சேவியர் தலைமையில் நடைபெற்றது. அத்தருணம் பின்வரும் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

1 கல்லோயாவில் பூரண அமைதிஉண்டானபின்பே வெளியேறியோர் திரும்புவது.

2 வெளியேறியிருந்த இரண்டு மாசங்களுக்கும் உதவிப் பணம் வழங்க வேண்டும்.

3 கல்லோயாவில் 60வீதமான தமிழ் மக்களைக் குடியிருத்த வேண்டும்.

4 குடியேறியவர்களே அங்கே கடைகள் வைத்திருக்க வேண்டும்.

5 தமிழ்க் குடும்பங்கள் முஸ்லிம் குடும்பங்களுக்கு இடங் கொடுத்த பின்பே சிங்களக் குடும்பங்களுக்கு இடங்கொடுக்க வேண்டும்.

6 இராணுவப்பாதுகாப்புத் தொடர்ந்திருக்க வேண்டும்.

## நேருவின் மொழிக்குள்ள மேன்மை

சைப்பிரஸ் பிணக்கு தீர்ப்பதற்கு வழி சொல்லுமாறு பண்டித நேரு அவர்களைக்கேட்கும்படி தொழிற் கட்சிப் பாராளுமன்ற அங்கத்தவர் ஸ்ரீ எம். ரி. ஹக்ஸ் பிரித்தானிய முதல் மந்திரி சேர் அன்தொனி ஈடனுக்கு ஆலோசனை கூறி வலியுறுத்தினராம்.

அரசியல் அலை

# தளங்களைப்பற்றி இங்கிலாந்து போடும் தாளம்

## பிரித்து ஆளும் தந்திரத்தைப் பிரித்தானியா கை விடாது

திருக்கோணமலைத் தளங்களை இங்கிலாந்து இலங்கையரிடம் கொடுப்பதற்குச் சித்தமாய்விட்டதாம். இந்தத் தீவை ஒரு விளையாட்டு மைதானமாகப் பிரித்தானியாவும் அதற்கு முன் வேறு மேற்கு நாடுகளும பயன்படுத்தி வந்ததுமன்றி ஈழத்திலுள்ளவர்கள் என்றும் பிரிந்திருக்கும் நிலைக்கும் காரணராய் உழைத்தும் வந்திருக்கின்றார்கள் என்பது இப்பொழுது வெளியாகி விட்டது

ஈழத்தின் அரசியல் அமைப்பு முற்றாய் வகுப்பு வாத முறையில் அமைந்திருக்கிறமையால் இந்நாட்டின் அரசுமுறை சனநாயக முறையாகா தென்பதைத்தானும் இங்கிலாந்திலுள்ள அரசாங்கம் எண்ணாது விட்டதே ஆச்சரியமாயிருக்கின்றது.

தளங்கள் ஆங்கிலேயர்கள் கையில் விடப்பெற்றதற்குக் காரணம் இந்நாட்டின் பாதுகாப்புத் தேவை என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். இப்பொழுது இலங்கையின் பாதுகாப்பு எவ்வளவுக்கு இலங்கையர்கள் பொறுப்பில் இருக்கின்றது. இந்தப் பொறுப்புப் போதுமானதா? என்ற கேள்விகளைப் பிரித்தானியா யோசித்துப் பார்க்காது தனது பொறுப்பை உடனடியாகக் கை கழுவி விடுவதென்றால் இப் பொறுப்பை ஏற்கும்பொழுது உண்மையாக இத்தீவின் நலனுக்காகஅதை இங்கிலாந்து ஏற்றுக்கொள்ளவில்லை என்றே சொல்லலாம். உலகிலே அமைதி நிலவுவதற்கு தென் ஆசியாச் சூழலிற் பாதுகாப்பு நன்கு அமைதல் வேண்டுமென்று முதலைக் கண்ணீர் வடித்த ஆங்கிலேய அமெரிக்க நண்பர்கள் இப்பொழுது நிலைமை எவ்வாறு மாறியிருக்கின்றது என்று பகிரங்கமாகக் கூறுவார்களா?

இலங்கை சுதந்திரம் அடைய முன் இந்நாட்டின் பாதுகாவற்பொறுப்பு இங்கிலாந்திடம் இருந்தது. சுதந்தரத்துக்கு உடம்பாடானபொழுதும் இங்கிலாந்திடம் இப்பொறுப்புத்தொடர்ந்து இருந்து வந்தது. ஈழத்தில் உள்ள பல்வேறு இனங்களும் இப் பொறுப்பில் நம்பிக்கையுடையவர்களாய் இருந்தார்கள். இப்பொழுது பொறுப்பு வாய்ந்த பிரித்தானியா 'நாய் குட்டி போட்டால் என்ன? பூனை கைம்பெண் ஆனல் என்ன' என்ற பழமொழி போல நடந்துகொள்வதின் மர்மம் என்ன? ஆளுங் கட்சியுடன் ஆளும் ஆளுமாய் நின்றுவிட்டால் நன்மை என்று ஆங்கிலேயர்கள் எண்ணிவிட்டார்கள். எண்ணி இங்குள்ள ஏனையோரைக் கைவிட்டுவிட்டார்கள்.

## காரைநகர் சிதம்பரேசுவரர் கோயில் இரதோற்சவம்

ஆனி உத்திரத் திருநாளாகிய ஆனி 21உ காரைநகர் சிதம்பரேசுமரர் திருக் கோயிலில் இரதோற்சவம் நடைபெற்றது. திரு.அ. தம்பையா அவர்கள் புதிதாய்ச் செய்வித்து உபயமாகக் கொடுத்த அலங்காரமான தேரில் சுவாமி எழுந்தருளினர்.

— கடித

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

யாழ். துர்முகி ஸூ ஆனி மீ உ௩ உ வெள்ளிக்கிழமை

### குடியரசுத் திட்டம் கொண்டு வருவாராம்

மொழித்துரோகம் இழைத்துவிட்ட ஈழத்து முதல் அமைச்சர், குடியரசுத் திட்டம் கொண்டு வருவதற்கு முடிவு செய்திருப்பதாக இலண்டன் மாநகரில் இறுமாப்புடன் கூறியிருக்கிறார். எப்பொழுது பிரதமராய் இலங்கையை ஆளும் பெருமை வந்தெய்தும் என்று பலகால் முயன்று பலதிறப்பட்ட அரசியற் கட்சிகளின் ஆதரவை நெஞ்சில் நாணமின்றி நாடி ஈற்றிலே தனிச்சிங்கள மயமான ஒரு கூட்டுக் கட்சியை உண்டாக்கி ஆதிக்கம் பெற்ற திரு. பண்டாரநாயக முன் தனது மனத்தில் அமைத்த கோட்டையை இப்பொழுது உண்மையாக்குவதற்கு வாயு வேகத்துடன் அரும்பாடுபடுகின்றார்.

தனிச் சிங்களச் சட்டத்தைக் கொண்டுவந்த பாராளுமன்றத்தினர் சிங்கள மக்கள் சார்பாகவே தீர்ப்பளித்தார்கள் என்றும் அதற்கு மாறாக நின்றவர்கள் தமிழர்கள் இசுலாமியர்கள் சிங்களவர்களில் இடதுசாரிக் கட்சியினர் என்றும் உலகறிந்த உண்மையையும் மறந்து அதே பாராளுமன்றச் சிங்கள ஆதிக்கத்தால் இந்நாட்டைக் குடியரசாக்க எண்ணி விட்டார் இனவெறி பிடித்த பிரதமர்.

குடியரசு என்றால் ஒரு உத்தம மனிதப் பண்பாட்டைக் குறிக்கின்ற கொள்கை என்பதைத் திரு பண்டாரநாயக அறியாதிருக்கின்றாரா. ஈழத்தின் குடிகள் யார்? சிங்களம் பேசும் மக்கள் மட்டுமா? ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக முன்னேற்றம் அடைந்து வந்த இந்த நாட்டிலே கொடுங்கோன் மன்னர்களாலும் கொண்டு வரப்படாத முறையற்ற மொழிச் சட்டத்தைப் புகுத்தி மனித நீதிக்கும் பொதுநலத்துக்கும் பங்கம் விளைவிக்கும் ஒரு அரசாங்கம் இச்சட்டத்தை ஈழத்து மக்கள் யாவரும் செய்கை முறையில் வரவேற்றிருக்கின்றார்களா என்று ஆராய்ந்து பார்க்க முன் இன்னும் ஒரு பாதகமான அரசியல் மாற்றத்தைக் கொண்டு வருவதென்றால் இது நீதியை இந்நாட்டில் இருந்து முற்றாய் வெளியேற்றி வைப்பதாகு மல்லவா?

# கொழும்புக்கு அருகே பண்டைத் தமிழர் நாகரிகச் சின்னம்

## சிங்களவருக்கு முற்பட்ட ஆதிக் குடிமக்கள் தமிழரே என்பதற்குச் சான்று

2500 ஆண்டுகட்கு முற்பட்டதெனக் கருதப்படும் கல்லறை ஒன்று கொழும்புக்கருகே நிலத்திற்கடியிலிருந்து அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளது. மனித எலும்புகளைக் கொண்ட பெரிய மண்பானைகள் தோண்டி எடுக்கப்பட்டிருக்கின்றன.

கொழும்பிலிருந்து வடக்கே சுமார் 90 மைல்தூரத்திலுள்ள ஓர் இடத்தில் இக்கல்லறை அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளது; இப்பானைகள் ஒவ்வொன்றும் சுமார் மூன்று அடி உயரமுள்ளது.

"இப்பானைகள் எத்தனை ஆண்டுகளுக்கு முற்பட்டவை எனத் திட்டவட்டமாக மதிப்பிட்டுக் கூறுவது கடினமானதாகும். ஆனால் ஒன்றுமட்டும் கூறமுடியும். பெரிய மண் பானைக்குள் இறந்த மனிதரின் சடலத்தை வைத்து அடக்கம செய்யும் பழக்கம் சுமார் 2500 ஆண்டுகளுக்குமுற்பட்டது. குறிப்பாக தமிழ்நாட்டின் தென்பகுதியில் அமைந்துள்ள திருநெல்வேலி மாவட்டத்தில் இப்பழக்கம் 2500 ஆண்டுகளுக்கு முன்பு நின்று நிலவி வந்தது" என்று இலங்கை புதைபொருள் ஆராய்ச்சித் துறைத் தலைமை அதிகாரி கலாநிதி எஸ். பரணவித்தாரண கூறினார்.

"சிங்கள நாகரிகம் கி. மு. 543 ஆவது ஆண்டில் தான் இலங்கையில் நிறுத்தப்பட்டது; இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்த விசயா என்ற இளவரசே சிங்கள நாகரிகத்தை இலங்கைமண்ணில் நிலைநிறுத்தியவர். ஆகவே சிங்கள நாகரிகம் இலங்கைக்குள் நுழைவதற்குமுன்பு வாழ்ந்த மக்கள் இனத்தின் கல்லறைகளாகவே இவைகள் இருக்கக்கூடும்" என்று கலாநிதி பரணவித்தாரண கூறினார்.

இறந்தவரின் சடலத்தைப் பெரிய பானை ஒன்றுக்குள் வைத்து மண்ணுக்கடியில் புதைக்கும் வழக்கம் பண்டைக்காலத் தமிழர்களால் கடைப்பிடிக்கப்பட்டு வந்த ஒன்றாகும்; சடலம் அடக்கஞ் செய்யப்படும் பானைக்கு பண்டைத் தமிழர் "முதுமக்கள் தாழி" என்ற பெயரிட்டனர் என்பது நினைவில் இருத்துதற்குரியதாம். இக்கண்டுபிடிப்பைக் கருத்துடன் நோக்குகையில் 2500 ஆண்டுகளுக்கு முன்பு (அதாவது சிங்கள நாகரிகம் இலங்கையில் தலைகாட்டுவதற்கு முன்பே) இலங்கையில வாழ்ந்து வந்த ஆதிக் குடிமக்கள் தமிழரே என்பது பெறப்படுகின்றது.

### புதைபொருள் பற்றித் தமிழ்நாட்டுக் கருத்து

இலங்கையின் ஆதிக்குடி மக்கள் தமிழர்களே என்று ஒரு சிங்கள ஆராய்ச்சியாளர் கண்டு பிடித்திருப்பது இப்போதுள்ள இலங்கை அரசினருக்கு ஒரு படிப்பினையாக இருக்கவேண்டும் என்று விரும்புகின்றோம் சிங்கள நாகரிகம் இலங்கையில் தோன்றியது கி. மு. 543-ம் ஆண்டில் தானென்றும் 2500 ஆண்டுகளுக்கு முன்னமேயே தமிழர்களுடைய நாகரிகம் அங்கு நிலைத்திருந்ததற்கு அங்கு தோண்டியெடுக்கப்பட்ட

தொடர்ச்சி 5-ம் பக்கம்

### கந்தர்மடம் ஸ்ரீ சித்திவிநாயகர் கோயில் மகாபாரதப் பிரசங்கங்கள்

ஆனி 12 உ (25-6-56) திங்கட்கிழமை தொடக்கம் மேற்படி கோயில் திருவிழாக் காலத்தில் நடந்துவந்த மகாபாரதப் பிரசங்கங்கள் மேலும் பத்து நாட்களுக்குத் தொடர்ந்து நடைபெறுமென்று அறிய வருகின்றது. ——

### கதிர்காம யாத்திரை நல்லூர்க் கந்தசுவாமி கோவிலில் விசேட ஒழுங்கு

குழப்பம் காரணமாய் கதிர்காம யாத்திரை செய்ய முடியாமலிருக்கும் அடியார்களின் அனுட்டான உதவிக்காக நல்லூர் கந்தசுவாமி கோயிலல் ஆனி மீ 25 உ ஞாயிற்றுக் கிழமை 8-7-56 மாலை சிறந்த சண்முக அர்ச்சனையும் அன்று தொடக்கம் கதிர்காமத் திருநாட்களாகிய 15 நாட்களிலும் பக்திப்பாடல் பாராயணமும் நன்கு நடைபெறுமென்று அறிய வருகின்றது. ——

### தமிழ் நாட்டு ஒற்றுமை

பேராசிரியர் திரு கே. சிவராமன் அவர்கள் தமக்கு அளிக்கப்பட்ட விருந்துபசாரம் ஒன்றிற் பேசும்போது தமிழ் மக்களுள் ஒற்றுமை அவசியம்வேண்டும் என்பதை வற்புறுத்தி இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலுள்ள சிறு பாக்குநீரிணை தமிழ்நாட்டின் ஒற்றுமைக்கு இடையூறாயிருக்கமாட்டாது என்று குறிப்பிட்டாராம்.

திருக்கோணமலையிலே ஆங்கிலேயர்கள் அமைத்த தளங்களைக் கைப்பற்றுவதால் ஈழத்துக்கு ஒருவகையிலும் பயன் எய்தப்போகின்றதில்லை என்பதை யறிந்தும் தனிச்சிங்களப் பிரதமர் தமிழ் பேசும் மக்களின் பொருளாதார நிலைமையைப் பங்கப்படுத்துவதற்காகவும் தமிழகத்தில் நுழைந்து தனி ஆதிக்கஞ் செலுத்துவதற்காகவும் அன்றோ இவற்றை இங்கிலாந்திடம் வலிந்து இரந்து கேட்டிருக்கின்றார்.

படிப்படியாக நாளுக்கு நாளாகத் தனிச் சிங்கள மயமாக்கும் திட்டம் நடைமுறையிற் கொணரப்படுவதைத் தமிழ் பேசும் மக்கள் நன்கு அறிவர். சனநாயக முகமூடியில் நின்று தனிச்சிங்கள அரசு நடத்துவதை ஏனையோர் ஒருபொழுதும் ஏற்றுக்கொள்ளார்கள். இந்த நாட்டு மக்களில் ஒருசாராரை ஒதுக்கும் இயக்கம் இக்காலத்து அரசியல் முறைக்கு முற்றிலும் முரண்பாடானது என்பதை இலண்டனிற் கூடியிருக்கும் இதர நாட்டுப் பிரதமர்கள் திரு. பண்டாரநாயகவுக்கு எடுத்துரைக்கமாட்டார்களா?

# சிறப்பில்லாத சிங்கள மொழி

## தனிச்சிறப்புடைய தமிழ்மொழியை அகற்றுவதா?

திரு. நா. சேனாதிராசா
யாழ். கமக்காரர்சங்கத் தலைவர்

உண்ணாமுலை உமையாள், ஞானசம்பந்தப் பெருந்தகைக்கு, ஞானப்பால் ஊட்டினாள். எங்கள் அன்னைமார் முலைப்பால் ஊட்டி எங்களை வளர்த்தார்கள். இந்த இலங்கைத் தீவில் தமிழ்ப் பேசும் மக்களாகிய எங்களை, தமிழ்த்தாய் அறிவை ஊட்டி இன்றுவரை வளர்த்தார் இப்படியான எங்கள் தமிழ்த்தாயை, அரசகரும மொழியாய் இல்லாதொழித்தார்கள் கொடிய சிங்களத்தலைவர்கள். தேன் போன்ற, அமிர்தம் போன்ற, தனிச் சிறப்புடைய தமிழ் மொழியை இல்லாதொழித்து, ஒரு தனிச்சிறப்புடைய மொழியாய் இன்னும் நிலைபெறாத "சிங்கள மொழியை" மாத்திரம் இலங்கை மக்களின் அரசகரும மொழியாக்கி விட்டார்கள் சிங்களத்தலைவர்கள். இப்படி நீதியில்லாது செய்தற்குக் காரணம் தங்களைக் கேட்பார் ஒருவருமில்லை என்பதுதான். இந்தியாவில் சிறுபான்மையோரின் பாஷையைக்கூட அரசகரும மொழியாக்கி யிருக்கிறார்கள். உலகிலுள்ள மற்றுந் தேசங்களில் மூன்று பாஷைகள், நாலு பாஷைகளை அரசகரும மொழியாக்கியிருக்கிறார்கள். இந்தியாவில் பதினைந்து மொழிகள் அரச கரும மொழிகளாயின. இந்த இலங்கைத் தீவில் உள்ளவை ஆக இரண்டேயிரண்டு மொழிகள். இரண்டு பாஷைகளையும் அரசகரும மொழிகளாக்காமல், சிங்களத்தை மாத்திரம் அரசாங்க மொழியாக்கியிருக்கிறார்கள். எதற்காக இப்படிச் செய்யத் துணிந்தீர்களென்று அரசாங்கத்தை நடத்தும் குழுவினரைக் கேட்டால், தமிழ்ப்பாஷை உலகெங்கும் பிரசித்திபெற்று, உன்னத நிலையிலிருக்கின்றது. எங்கள் சிங்களப் பாஷை நல்லாய் விருத்தியடையவில்லை. இலங்கையில் மாத்திரந் தான் சிங்களவர்களும், சிங்களப் பாஷையும். தமிழிற்குச் சமஅந்தஸ்துக்கொடுத்தால் 50 வருடத்தில், சிங்களப்பாஷை அழிந்துபோகும்" என்று சொல்லுகிறார்கள். ஒருமொழியை அழித்து இன்னொரு மொழியை வளர்க்க வேண்டுமாம். தமிழை அழித்துச் சிங்கள மொழியை வளர்க்கவேண்டுமாம். அப்படியானால் அறிவிற் சிறந்த தமிழ்ப் பேசும் மக்களையும் சட்டமியற்றி அழித்துவிட்டு, அறிவிற் குறைந்த சிங்கள மக்களை வளர்க்கலாந்தானே. இப்போது இலங்கையில் சிங்கள இராச்சியந்தானே நடக்கிறது. சிங்கள மொழியைத் தமிழ்ப்பேசும் மக்களின் தொண்டைக்குட் திணிக்க நாம் உடன்படலாமா? எப்படி ஒரு சட்டத்தை அரசாங்கம் இயற்றினாலும், அந்தச் சட்டத்தை நடைமுறையில் கொண்டு வரவேண்டும். அதிலே தானிருக்கிறது விஷயம். தமிழை அழித்துச் சிங்களத்தைத் திணிக்க எண்ணும் முறை, தமிழர்களாயுள்ள எங்களையும் எங்கள் பின் சந்ததியாரையும் சிங்களவராக்க எண்ணுவதாகும். ஆகையால் இது எங்கள் கலை கலாச்சாரம் சமயம் எல்லாவற்றை

தொடர்ச்சி 5-ம் பக்கம்

# தனிச் சிங்களச் சட்டம் மக்கள் ஆட்சிக்கு மாறுனது

## மகாசனக் கல்லூரி அதிபர் தமிழிலே சமர்ப்பித்த அறிக்கை

(முற்றெடர்)

'நீதிக்கு அழிவில்லை' என்னும் பொன்மொழியில் தமிழர்களுக்குத் திடமான நம்பிக்கை உண்டு எதிர்காலத்தைத் தமிழர்கள் நம்பிக்கையுடனும் திடமனததுடனும் நோக்குகின்றனர் இப்பொழுது எழுந்துள்ள மொழிவெறி விரைவில் ஓய்ந்துவிடுமெனவும முற்போக்கும் நிதான புத்தியும் உடைய சிங்களச் சகோதரர்களும் பிழை இழைக்கப்பட்ட சிறுபான்மையினருடன் சேர்ந்து நாட்டில் அமைதியையும் சமாதானத்தையும் நிலவச்செய்து செல்வம் கொழிக்கச் செய்வார்கள் எனவும மனப்பூர்வமாக நாம் நம்புகிறேம். அதுவரையும் தமிழ் மக்கள் தங்களை அழித்தொழிக்கும் சூழ்ச்சிகளுக்கு ஒருபோதும் உடந்தையாக இருக்கமாட்டார்கள் என்பது திண்ணம். தங்களைப் பொறுத்த வரையில் இப்புதிய சட்டம் ஒருபோதும் நடைமுறைக்கு வராது எனத் தமிழர்கள் உறுதிகொண்டுள்ளனர். பின்னர் ஏற்படும் பலாபலன் எதுவாக இருந்தாலும் சிங்களத்தில் அலுவல்களை நடத்த அவர்கள் ஒருபோதும் ஒருப்படமாட்டார்கள் இத்தகைய எதிர்ப்புக்குத் தமிழ் பேசும் மக்கள் எல்லோரும ஏகோபித்து விரதம் பூண்டுள்ளார்கள். எதிர் காலத்தில் தமிழ் மக்கள் எடுக்கவிருக்கும் ஒருமுகப்பட்ட நடவடிக்கைக்கு இப்படியான வஞ்சினம் எடுத்து நிற்பது இன்றியமையாததாகும்.

### இந்நிலையிற் கல்விநிலையங்கள்

இந்த நிலையினின்றும் சற்றேனும் பின்வாங்காமல் இருப்பதற்கு இதனல் எங்கள் பாடசாலைகளுக்கும் எங்கள் குழந்தைகளின் கல்விக்கும் ஏற்படக்கூடிய விளைவை நாங்கள் நன்கு ஆலோசனை செய்யவேண்டும. அரசாங்க சேவைக்குத் திறவுகோலாகச் சிங்களமொழிக்கல்வி இருக்கலாம். எனினும் நாங்கள் செய்துகொண்ட முடிபுக்கேற்ப எங்கள் பாடசாலைகளில் சிங்களம கற்பிக்க முடியாது இதன் கருத்து என்ன? அரசாங்க அலுவல்களிலும் ஏனைய நிலையங்களிலும் உள்ள எழுத்து வினைஞர்கள் முதலிய தொழில்களை நாடமாட்டோம் என்பதோடு, இதற்கு முன்னர் செய்தது போல நாம் எமது பாடசாலைகளில் இத்தொழில்களிற்கு வேண்டிய கல்வியைப் புகட்டமாட்டோம் என்பதே. இனி எங்கள் பாடசாலைகளில் அளிக்கப்படுங் கல்விக்குப் புது மெருகு கொடுக்க வேண்டும். இலங்கையின் வடகீழ்ப் பகுதிகளில் உள்ள பொருளாதார வளங்களை விருத்தி செய்யும் இலக்கை நாங்கள் பின்பற்ற வேண்டும். கூடிய விரையிலே சிறந்த முறையில் இந்த இலக்கை நாம எப்படி அடையலாம் என்னும் கேள்விக்கு எங்கள் மக்களும் தலைவர்களுந்தான் மறுமொழி காண வேண்டியிருக்கிறது. "தனிச் சிங்களச் சட்டம்' பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும்போது எங்கள் எதிர்ப்புக் கோஷத்தைக் காட்ட வேண்டியது அவசியந்தான் ஆனல இனி எமது ஆக்க வேலைகளில் கருத்தூன்றி யிருக்கும்போது இப்படியான எதிர்ப்புக் கோஷத்தில் மாத்திரம் எமது முழுக்கவனத்தையும் செலுத்துதல் அறிவுடைமையாகாது. தமிழ்க் கல்வியையும் பண்பாட்டையும் வளர்க்க யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் கட்டாயமாக நிறுவ வேண்டும் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன், தகுந்த சந்தர்ப்பத்தில் அம்முயற்சிக்கு அடிகோலலாம். ஆனல் இப்போது எங்களுக்குப் பொருளாதாரத் துறையில் ஆக்க முயற்சித் திட்டங்களே அவசியம் தேவையாக இருக்கின்றன. இத்திட்டங்கள் சில ஆண்டுகளில் எங்கள் சுய தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டும். மக்களும தலைவர்களும தங்கள் சக்தியையும் திறமையையும் இந்த ஆக்க முயற்சிகளுக்கே செலுத்த வேண்டும். இப்படிச்செய்தால் எங்களுக்கு ஏற்படக்கூடிய பாரதூரமான நெருக்கடிகளைத் தவிர்த்துக் கொள்ளலாம். பாலைவனமாகக் காட்சியளித்த இஸ்ரவேல் பூமியை யூதர்கள் தங்கள் இயல்பான கடின உழைப்பு மூலம் பாலுந்தேனும் ஓடுஞ் சோலைவனமாக மாற்றியுள்ளார்கள். தமிழ்ப்பேசும் மக்களும் கடினமான உழைப்பிற்குப் பேர்போனவர்கள் எனவே இந்த ஆக்க முயற்சிகள் அவர்களுக்கு மெய் வருத்தத்தையும் சிரமத்தையும் கொடுக்காதென்பது உறுதி.

எங்கள் பாடசாலைகளில் ஆங்கில மொழிக் கல்விக்குக் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என்றுநான் சொல்லத் துணிவது முதலில்கருத்தற்றதாகத் தெரியலாம். ஆனல் அதை ஆராய்ந்து பார்ப்பின் உண்மை புலனுகும். ஆண்டுகள் செல்லச் செல்ல எங்கள் இளைஞர்கள் இலங்கைப் பல்கலைக் கழகத்திற்குப் புகும வாய்ப்புக் குறைந்து கொண்டே போகும். இதில் ஐயமில்லை இந்நிலையில் இளைஞர்கள் பிறநாட்டுப் பல்கலைக் கழகங்களில் இடந் தேடிப் போக வேண்டும். அப்படி அவர்கள் பிறநாடுகளிற்குப் போனுற்ருன் எங்கள் தேவைக்கு வேண்டிய பூத நூல் வாணரும் பொறிஇயல் வல்லுனரும் தொழில் நுட்ப வல்லுனரும் வைத்தியரும் பெருகுவார்கள். தமிழில் நாங்கள் கொண்டுள்ள ஆர்வம் ஆங்கிலத்தின் இன்றியமையாமைபற்றிய எங்கள் அறிவுக் கண்ணை மறைக்கக் கூடாது. ஆங்கிலம ஒன்றின் மூலமாகவே மேல்நாட்டு நல்லறிஞர் வளர்க்கும் சாததிரங்களின் அறிவுப் பேற்றை நாம அடையமுடியும். இதனை நாங்கள் ஒருபோதும் இழக்கக்கூடாது பண்பாடடைந்த ஏனைய உலகத்தின் தொடர்பைத் துண்டித்துவிட்டு நாங்கள் ஒரு மூலையில் ஒதுங்கி வாழ்வது எமக்கு நன்மை பயக்காது. எனவே இப்போதைய கல்வித் திட்டத்தைப் போல அனைவருக்கும் ஆங்கிலக் கல்வி அமையாவிட்டாலும் திறமை வாய்ந்தவர்களுக்கு ஆழமான ஆங்கில அறிவு வேண்டும் என்பதனை நீங்கள் யாவரும் ஒத்துக் கொள்வீர்கள் என நம்புகிறேன்.

—

# ஈகை என்பது யாது?

## வள்ளுவர்மொழிப்படி வாழ்க தமிழகம்

திரு. ம. மருதலிங்கம்

சங்கானை

ஈகை எனப்படுவது யாதெனில் "வறியார்க் கொன்றீவதே ஈகை" என்பது அதை விளக்கும். அல்லாத ஏனைய 'ஈகை' சில குறிப்புப்பற்றியும் ஓர் அளவு குறித்து வழங்கியும் அந்த அளவு குறித்தலின்றிப் பின் எதிர் தமக்கு வரும் என்னும் உள்ளக் குறிப்புடன் அள்ளிக் கொடுப்பதாகும். ஈகையின் பயனை இட்டாரின் இணையிலாப் பண்பினை அறியாத மக்கள் இன்பத்தையே இன்னதென்று அறியாத வறிஞர்களாகின்றர்கள். 'ஈந்து உவக்கும் இன்பம் அறியார் கொல் தாம் உடைமை வைத்து இழக்கும் வன் கணவர்" என்றூர் வள்ளுவர். மக்கள் உலகிலே வாழ்வாங்கு வாழ்ந்த மன்னன் ஒருவனை அந்நாட்டு மக்கள் "வானுறையுந் தெய்வம்" எனப் போற்றியது. அந்நெற்யில் வாழ்ந்த செம்ம[...] அறம் படைத்தோன் ம[...] கள் குடி தழீஇக் கோ[...]ச்சி வாழ்ந்த மானில மன்னன் சோழமன்னன். இ[...]துணைச் சிறப்புடைய மன்னனது நாட்டிலேகூட ஒ[...]கால் வறுமையால் வா[...] இரப்போர் கூட்டம் அ[...] நாட்டுச் செல்வர்களை [...] கண்டு சென்னி தாழ்ந்[...] நெடிது நாள் பொருளின்[...]மையினல் உடல் சுருங்[...]கின்றது. இத்தகைய ம[...]கள் நாள்தோறும் இரந்[...] இரந்து உயிர் வாழ்ந்தவ[...]கள். இரந்து உயிர் வா[...]வதே இன்பமாகக் கொண்[...]டார்கள். இத்துணைத் துன்[...]பத்தில் ஆழ்ந்து வாழ்ந்[...] மக்கள் ஒருகால் சோழ மன்னன் முகத்தைக் கண்[...]டார்கள். அன்று தொட[...]கம் அவர்கள் மானிலத்[...] மக்களைப் பின் சென்று இரவாது இன்புற்று வாழ்ந்தார்கள். முன்னெருகால் உலக மக்கள் பின்சென்று தொடர்ந்து தாழ்ந்து இரந்து வாழ்ந்த மக்கள் சோழ மன்னன் முகம் பார்த்தபின்னர் ஒருநாளும் உலக மக்களைப் பொருள் வேட்கை கொண்டு பார்த்திலராம். இந்நிலையில் வந்தோர்க்குச் சோழ மன்னன் என் செய்தான். இரந்தோர் இறுதிவரை இனிது வாழ்வதற்கு வழி காட்டினன். அவர்கட்கு என்றுங் குறைவிலா உணவை ஈந்தான். நிறைந்த செல்வத்தை இரப்போர் உளங் குளிர அள்ளி அள்ளி வழங்கினன். இரப்போர் கூட்டம் பின் எக்காலமும் இரவா வண்ணம் பரம்பரை பரம்பரையாக உண்டு உடுத்து இன்புற்று இனிது வாழும் வகை செய்தான்.

இத்தகைய சோழ மன்னனின் பண்பாட்டுச் சிறப்பை உலகப் பொதுக்கவிஞன் வள்ளுவர் ஈரடியில் அழகுற அள்ளி வழங்குகின்றர். ஒருவன் தம்முன் வந்துஇரப்பதற்குமுன்னே அவனது குறிப்பறிந்து கொடுப்பதும் அவன் பின் பிறன் ஒருவன்பாற் சென்று பின்னும் இரவா வண்ணம் இரவாவகையால் நிறையக் கொடுத்தலும் அவன் பின்னும் பின்னும் பொருளுடையேனல்லேன் எனக் கொடுப்பார் முன் சென்று சொல்லும் இளிவரவைச் சொல்லாதும் கொடுத்துதவுவதே 'ஈகை' என்று எடுத்துக் காட்டுகின்றூர் "இலன் என்னும் எவ்வம் உரையாமை ஈதல் குலன் உடையான் கண்ணே உள" எனவே நாம் சோழமன்னனின்செய்கை வழியும் வள்ளுவரின்மொழி வழியும் சென்று செம்மையான வாழ்வை வாழ்வோமாக.

———

# தஞ்சைவாணன் கோவை

## சொக்கப்ப நாவலர் உரை

பொய்யாமொழிப்புலவர் பாடிய **தஞ்சைவாணன் கோவைக்குப்** பேர் பெற்ற பழைய உரையாகிய குன்றத்தூர் - அஷ்டாவதானி சொக்கப்பநாவலர் உரை வித்துவான் ந. சுப்பையபிள்ளை அவர்களின் குறிப்புரையுடன் யாழ். சைவபரிபாலனசபையார் வெளியிட்ட முதலாம் பதிப்பினைப் பலர் அறிவர். அதனை, பின்னர்க் கிடைத்த ஏட்டுப் பிரதிகொண்டு பரிசோதிப்பித்துத் திருத்தப் பதிப்பாக இப்போது வெளியிட்டிருக்கின்றனர். அது தமிழிலக்கண இலக்கியங் கற்போருக்கும், யாழ்ப்பாண ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச்சங்கப் பால பண்டித பரீட்சை, மதுரைத் தமிழ்ச் சங்கப் பால பண்டித பரீட்சை, சென்னைப் பல்கலைக்கழக வித்துவான் பரீட்சை, அண்ணமலைப் பல்கலைக்கழகப் புலவர் பரீட்சை ஆதியவற்றிற்குக் கற்கும் பரீட்சார்த்திகளுக்கும் பெரிதும் பயனபடக்கூடியது. நாற்கவிராஜ நம்பியகப் பொருளுரையில் இக்கோவைச் செய்யுள் முழுவதும் உதாரணமாகக் காட்டப்பட்டிருத்தலின், அவ் விலக்கணங் கற்போருக்கும் பெரிதும் பயன்படுவதாகும் என்பது சொல்லாமலே விளங்கும்.

மாணிக்கவாசக சுவாமிகள் பாடியருளிய திருச்சிற்றப்பலக் கோவைக்கு அடுத்தபடியாக முதன்மை பெற்று அறிஞராற் பாராட்டப்படுவது தஞ்சைவாணன் கோவையே. அதற்குச் சொக்கப்பநாவலர் இயற்றிய உரை அகப்பொருட்டுறைக் கருத்துக்களையும் பிறவற்றையும் தெள்ளிதின் விளக்குந் தன்மைவாய்ந்து, அக்கோவைக்கு ஓர் அணிகலன்போலத் திகழ்வது என்பது அறிஞர்கருத்து. அங்ஙனஞ் சிறந்து விளங்கும் அக்கோவையின் செய்யுட் கருத்து உரைக் கருததுக்களை மயக்கமற இலகுவாக விளங்கிக் கற்றற்குச் சாதகமாக வித்துவான் அவர்கள் எழுதிய குறிப்புரை பரீட்சார்த்திகளுக்கும் ஏனையோர்க்கும் பெரிதும் பயன் தரத் தக்கது எனபது இதன் முதற்பதிப்பினல் அறியக் கூடிய தொன்றுகும்.

இப் புத்தகம் பெறவிரும்புவோர் எம்மிடத்தும், பிரபல புத்தக வியாபார ஸ்தலங்களிலும் விலைக்குப் பெற்றுக் கொள்ளலாகும்.

**விலை ரூபா : 6 - 00.** வியாபாரிகளும், தொகையாக வாங்குவோரும் உரிய கழிவுடன் விலைக்குப் பெறலாம்.

மனேஜர்,
சைவப்பிரகாச யந்திரசாலை,
யாழ்ப்பாணம்.

# பொய்யை மெய்யாக நினைத்த பேதைமை

## அறிவு சிறந்த பெரியோர் துன்பங் கண்டு வருந்தார்

### ண்ணகிசரிதையிற் காணும்பலகருத்துக்கள்

சோழ மண்டலத்திலே ாவிரிப்பூம் பட்டினம் என் ும் ஓர் சிறந்த நகரத் லே மாநாய்கன் என்னும் பயரையுடைய வணிகன் ருவன் இருந்தான். அவ் ணிகனின் மகளாகிய ண்ணகி என்பவள் பொற் னல் இலக்குமியென்றும் ற்பினல் அருந்ததியென் ும் அவ்வூர் மக்களால் பாற்றப்பட்டு வந்தாள். க் கண்ணகிக்கு தேவந்தி ன்னும் ஒரு பிராமணப் பண்ணும் பாங்கியாக ருந்தாள். கண்ணகி ரொரு வண்ணமும் பாழுதொரு மேனியுமாக ளர்ந்து பன்னிரண்டாம் ண்டு நிறைவுள்ள இளம் ங்கையாளுள்.

அதே காலத்தில் அந் கரத்தில் பெருஞ் செல்வ ும் பெருங் கொடையாள ுமா யிருந்த மாசாத்து ன் என்னும் வணிகனு கு மகனய் வந்த கோவ ன் என்பவனும் அழகு ல்வி, அறிவு, பொறை, ண்மை, கீர்த்தி முதலிய வைகளிற் சிறந்து வளர் து பதினறும் வயசென் ும் பருவத்தை யடைந் ான். இவ்விருவர்களு டைய தாய் தந்தையரும் றரும் ஒரு நன்னளில் கோவலனுக்கு கண்ண யை மணஞ்செய்து வைத் ார்கள், கண்ணகியும் கோவலன் மேலே அன்பு டையவளாய் துறந்தோர், றியோர், சுற்றத் தார் ருந்தினர் முதலியோர் ளையெல்லாம் அன்பாக உபசரித்து இல்லறத்தை வழுவாது நடாத்திவந்தாள். கோவலனும் கண்ணகி மேல் மிக்க அன்புடையவ ய் விளங்கினன். தன் மனையாளைப் போற்றிப் புனைந்துரைத்து வந்தான்.

"மாசறு பொன்னே வலம்புரி
முததே
காசறு விரையே கரும்பே
தேனே
அரும்பெறற் பாவாய் ஆருயிர்
மருந்தே
பெருங்குடி வணிகன் பெருமட
மகளே
மலையிடைப் பிறவா மணியே
என்கோ
அலையிடைப் பிறவா அமிழ்தே
என்கோ
யாழிடைப் பிறவா இசையே
என்கோ
தாழிருங் கூந்தற் றையா
னின்னை"

—சிலப்பதிகாரம்.

என்று கோவலன் தன் கண்மணி போன்ற கண் ணகியைப் பாராட்டி மகிழ்ந் தான். இப்படியே இல்ல றத்தை இவ்விருவரும் கல ந்து சில ஆண்டுகள் இனிது நடாத்தி வந்தார்கள். அந் நாட்களில் ஆடல், பாடல் அழகென்னும் மூன்றில் ஒன்றும் குறைபடாமல் வீரக் கழல் அணிந்த சோழன் சபையில் நாடகக் கணிகையாக மாதவியென் பவள் ஆடலையும் பாடலை யும் அரங்கேற்றினள். அப் பொழுது தொடக்கம் கோ வலன் மாதவி மேல் காதல் கொண்டு தன் பொருட்களை யெல்லாம் நாளுக்கு நாள்

திரு. வே சிற்றங்கநாதன்
— சங்கானை —

அவளுக்கே கொடுத்து சின்னுள் அவளோடிருந் தான். பின்னர் அவளை யும் விட்டுத் தனது பிரி வால் வாடித் தயங்கிய கண்ணகியைக் கண்டான்; உடனே "பெண்ணேபொய் யெல்லாம் மெய்யாகப் பொ ருந்தும் பரத்தைக்கு பொரு ளெல்லாங் கொடுதது மிக வும் வறியவனய்விட்டேன்" என்று கூறி இரங்கினன்.

அதைக் கேட்ட கண்ண கியும் கோவலன் மாதவிக் குப் பின்னும் பொருள் கொடுக்க நினைத்து இப் படி இறைஞ்சுகிறன் என் றெண்ணி கூறுகிருள். "இன்னும் இரண்டு சிலம்பு கள் என்பாலுள்ளன; அவைகளையும் தருகின் றேன் எடுத்துக் கொள்க" என்ருள். கோவலன் கண் ணகியை நோக்கி "மாதே! இச் சிலம்புகளை மதுரை மாநகரில்கொண்டு சேர்த்து விலை கூறி விற்று வேண் டும் பொருளை முதலாக வைத்து வாணிகஞ் செய்து பரத்தையாகிய மாதவியோ டுடாடிப் பாழாக்கிய பொ ருள்களை யெல்லாம் இந்த நேரத்திலே தேடிக்கொள் ளத் திட்டமிடுகிறேன் நீ யும் என்னேடு புறப்படு என்று கூறினன்.

காதலர் இருவரும் இருள் பரந்த விடியற் காலத்தில் எழும்பித் தங்கள் பெருமை யுற்ற வீட்டைவிட்டேகினர் கள். புறப்பட்டு மேற்குத் திசையை நோக்கி காவேரி யின் வடகரையாக வழி நடந்து சென்று இருவரும் அந் நகரெல்லையைக் கட ந்து அப்பாற் சென்ருர் கள். கண்ணெதிரேசோலை யொன்றெதிர்படக் கண்டு சிறிது இளைப்பாறக் கருதி அச்சோலையின் ஒரு பக் கத்தில்போய் கவுந்தி என் னும் தவப் பெண்ணைக் கண்டு இருவரும் வணங்கி னர்கள். கவுந்தியடிகள் கண்ணகி கோவலன் என் னுமிருவரையும் உற்று நோக்கி, "அழகும், குலமும் ஒழுக்கமும் வாய்ந்த நீங்க ளிருவரும் துன்பத்தால், நலிந்தாரைப்போல வீட் டைவிட்டு வெளியேறுதற் குக் காரணம் என்னை" என்று கேட்டார். அதற் குக்கோவலன் "அடிகளே, பொருள் தேடும் பொருட்டு மதுரை மாநகரத்திற்குச் செல்கின்ருேம் என்று சுரு க்கமாகப் பதிலுரைத்தான். அதுகேட்ட கவுந்தியடிகள் "நானும் செந்தமிழ் பயி லும் மதுரையில் சென்று அறவுரை கேட்கும் ஆர்வ முடையேன். ஆகையால் நானும் உங்களுடன் வருகி றேன்"என்று மொழிந்தார்.

பின்பு கண்ணகி கோவ லன் கவுந்தியடிகள் என் னும் மூவருமாக காவிரியின் தென் கரையிலே உள்ள சோலையில் போய் இளைப் பாறினர்கள். அப்பொழுது குட்டினியாயுள்ள ஒரு தூர்த்த மங்கையும் ஒரு தூர்த்த நாயகனும் அங்கே வந்தார் கள். அவர்கள் இருவரும் கோவலனையும் கணணகி யையும் பார்த்துக் "காமனு மிரதியும் போலக் கலப்பு டையவராய் இங்கே இரு வர் இருக்கின்றனர்! இவ் விருவரும் யாவர்" என்று கவுந்தியைக் கேட்டார்கள். அவர்களுக்குக் கவுந்தியும் "இவர்கள் என் மக்கள்! காமனு மிரதியு மல்லர்! மானிட சரீர முடையவர்! வழி நடையால் வருந்தினர். அவர்களிடம் ஒன்றும் பேசாமல்விலகிப்போமின்" என்று அருளினர் அவர் கள் உடனே கவுந்தியை நோக்கி "அறிவாற்றல் சிற ந்த அருந் தவத்தோரே ஒருவயிற்றில் பிறந்த ஆணும் பெண்ணும் காதல னும காதலியுமாக வாழலா

தொடர்ச்சி 6-ம் பக்கம்

Visit GOLD HOUSE For Jewels



எல்.கே.எஸ் பிரதர்ஸ்,தங்க மாளிகை
யாழ்ப்பாணம்
PHONE:161. GRAMS: JEWELLERS

யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி
1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
616313,00
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந் தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன் றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.
மீச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமாளுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கி யிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ள வர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய் யப்பட்டிருக்கின்றன.
இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.
நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை எழுமூலமாக அறிந்துகொள்ளலாம்.

Std. 14 20-11-46—20-11-49.

S. கனகசபை
மெனேஜர்.

கம்பராமாயணம்
(யுத்தகாண்டம்)

குப்பகருணன் வதைப்படலம்
(ஒன்று முதல் 170 பாட்டுக்கள்)

------ யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையின் வெளியீடு ------

பரமேசுவரக் கல்லூரித் தமிழ்விரிவுரையாளர்,
வித்துவான், பண்டிதர், சைவப்புலவர், க. வேந்தனர் அவர்கள் எழுதிய
விளக்கவுரையுடன் விரைவில் வெளி வரும்.

- ஒவ்வொரு பாட்டிற்கும், கொண்டு கூட்டு, பொருள், பொழிப்பு, விளக்கம், குறிப்பு எனும் உறுப்புகள் அமைய உரை எழுதப்பட்டுள்ளது.
- விளக்கத்தில் செய்யுள் நயம் விரிக்கப்படுகின்றது. செய்யுளை உணர்ந்து உணர்ந்து தீட்டிய உரை நயம் மாணவர்க்கு நல் விருந்தாகும்.
- உவமான உவமேய விளக்கம், மாணவர் உள்ளத்தில் பதியக் கூடிய முறையில் எழுதப்பட்டுள்ளது.

இத்துடன்,

170 பாட்டுக்களையும் அவற்றின் பொருள்நிலைக்கு ஏற்பப் பத்தொன்பது பிரிவுகளாக வகுத்து, அப் பிரிவுகள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி தலையங் கங்கள் கொடுத்துப் பின் ஒவ்வொரு பிரிவுகளின் கீழ் உள்ள பாட்டுக்களின் பொருளையும் தொகுத்துத் தெளிவான உரைநடையில் எழுதப்பட்டுள்ளது. இதனல் மாணவர்கள் மிக எளிதாகப் பாட்டின் பொருளை விளங்கிக்கொள்வார்கள்.

மாணவர்கள் தாமாகவே படித்து, இலக்கியத்தை நயத்தற்கு வழிகாட்டும் வாய்ப்பான உரை.

# சிறப்பில்லாத சிங்கள மொழி

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

யும் இல்லா தொழிக்கச் செய்த சூழ்ச்சியாகும். இதற்குச் செய்யவேண்டியது, தமிழுக்குச் சம அந்தஸ்துக் கொடுக்கும்வரை

1 எங்கள் பிள்ளைகளைகட்குச் சிங்களம் கற்பிக்கக் கூடாது.

2 உத்தியோகத்தி லிருக்கும் தமிழ் மக்கள் சிங்களம் படிக்கக்கூடாது.

3 எங்கள் பாராளுமன்ற அங்கத்தவர்கள் பாராளுமன்றத்திற்குச் செல்லாது பகிஷ்கரிக்கவேண்டும்.

4 இலங்கை சிங்களவர்கட்கு மாத்திரமல்ல, தமிழர்கட்கும் உரியது என்று நிரூபிக்கவேண்டும்.

5 இந்த மக்கள் முன்னணிஅரசாங்கத்தை சாத்வீக முறையில் எதிர்த்து தமிழ்ப்பேசும் மக்களின் உரிமைகளைப் பெறவேண்டும்.

6 தமிழிற்குச் சம அந்தஸ்து இல்லையென்று முடிந்தால், தமிழர்களாய் உள்ள நாம் சுயநிர்ணயத்துடன் தமிழ் நாடாகப் பிரிந்து, தமிழ் இராச்சியம் நடத்த வேண்டும். வாழ்க தமிழ்த் தாயும் — தமிழ்ப் பேசும் மக்களும் — தமிழ் நாடும்.

## பெருங்குளம் விநாயகர் கோயில் உற்சவம்

கல்வயல் பெருங்குளம் வீரகத்தி விநாயகர்கோயில் உற்சவம் ஆனி முதலாந் தேதி தொடங்கி உரிய முறைப்படி தொடர்ந்து நடைபெற்றது. கொடியேற்றம் முதல் தீர்த்தம் வரையிலும் நாள்தோறும் நடைபெற்ற திருவிழாககளும் அபிடேக ஆராதனை முதலியனவும் காலம் கடவாது உரிய வேளையிலே நடைபெற்றமை இவ்வாண்டின்சிறப்புக்களில் ஒன்று.

9-ந்தேதி வெள்ளிக் கிழமை நடைபெற்ற தேர்த்திருவிழா நடுப்பகல் 12 மணிக்கு முன்பு முடிவடைந்தமையும், மறுநாள் நடைபெற்ற தீர்த்தவிழாவும் அவ்வாறே நடந்து முடிந்தமையும், அகால வேளைகளில் திருவிழாக்கள் நடைபெறுவதை விரும்பாத அடியார்களுக்கு மகிழ்ச்சிகொடுத்தன. தீர்த்தவிழாவின் முடிவின்போது மகேசுர பூசையும், மறுநாள் வைரவ பொங்கலும் நடைபெற்றன.

## மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாதரவில் நிகழும் துர்முகி ஞு ஆனிமீ உஅ உ (11-7-56) புதன் கிழமை மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை ஷ சபை நாவலர்மண்டபத்தில் கீழே காணப்படும் கிரமப்படி நடைபெறும்

நிகழ்ச்சிகள்:

முற்பகல் 10—பிற்பகல் 1 கடவுளாராதனை, நால்வர் பூசை, புராண படனம், திருவாதவூரடிகள் புராணம் திருவடி பெற்ற சருக்கம். மாகேசுரபூசை.

இரா விரிவுரைகள்:

தலைவர்: சபைத் தலைவர் திரு. த. முத்துச்சாமிப் பிள்ளை அவர்கள்

இரவு 6½—7 தமிழ்மறை யோதல் திரு. மு. சுப்பையாதேசிகர் அவர்கள்

1. தலைவர் முன்னுரை
2. மணிவாசகரும் இலக்கியமும்" வித்துவான் க. கி. நடராஜன் அவர்கள் B.O.L.
3. 'திருவாசகம் என்னும் தேன்' திரு. பொ. கருணைகரன் அவர்கள்
4. "முத்தி நெறி" திரு. மு. ஞானப்பிரகாசம் அவர்கள் B. A. B;Sc.

சைவாபிமானிகள் யாவரும் சமுகமளிப்பார்களாக.

மு. மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்,

சைவபரிபாலனசபை
யாழ்ப்பாணம், 19-6-56, (து 300)
M 320 6-7 (து 300)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்றிக்கோட்டில்
1. காரைநகர் வடக்கு செல்லையா ஆறுமுகம்
2 டையூர் பெண் செல்லம்மா
வழக்காளிகள்
இல. M B 719
எதிராக
பராயமற்றவர்கள்
1. எஸ். நல்லதம்பி மகள் லீலாவதி
2. நல்லதம்பி சதாசிவம்

3. கணபதி முருகேசு கைம்பெண் சேதுப்பிள்ளை யாபேரும் காரைநகர் மேற்கு 3ம் எதிராளி பராயமற்ற 1ம் 2ம் எதிராளிகளின் பராபரிப்புக் காரியாகவும் இறந்துபோன ஈட்டுக் கடன்காரனின் ஆதனங்களின் பராபரிப்புக்காரியாகவும்.

எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்றிக்கோட்டின் MB 719ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு தண்டுக் காணி 1956ஞு ஆடி மீ 21ம் உ சனிக்கிழமை முற்பகல் ஒன்பது மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 1609-50ம் ரூபா 1450/=க்கு 23-12-55 தொடக்கம் 6-3-1956 வரை 8 வீதமான வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 238-77 சதம்.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் தீவுப்பகுதி காரைதீவுக் கோவிற்பற்று வலந்தலை தங்கோடையிறை "களவில்" பரப்பு இல. இருபது (பர. கெ. இல. 20) எல்லை கிழக்கு காசிநாதன் பெண் ஞானமுத்துவிற்கும் ஆறுமுகம் பெண் பாக்கியத்திற்கும் உரிய ஆதனங்கள். வடக்கு கார்த்திகேசு கைம்பெண் சின்னக்குட்டிக்குரிய வாதனம், மேற்கு கந்தப்பு பொன்னையாவிற்குரிய வாதனம். தெற்கு வாய்க்கால் இதடங்கலும்.

1956ம் ஞு வைகாசி மீ 30ம் திகதி

வை. ஏரம்பமூர்த்தி,
கொம்மிஷனர்.
M 318 6-7 (து 300)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்றிக்கோட்டில்

காரைதீவு வடக்கு எம். விசுவநாதன் எம். சண்முகநாதன் எம். திருநாவுக்கரசு ஆகியவர்கட்கும் அவர்களின் ஆதனங்கட்கும் பராபரிப்புக்கோரும் மனு

பராயமற்றவர்கள்
தத்துவ இல 16/C
எதிராக

காரைதீவு வடக்கு விசுவநாதர் முருகேசம்பிள்ளை கைம்பெண் வள்ளியம்மை

பராபரிப்புத் தத்துவகாரி

யாழ்ப்பாணம் டிஸ்றிக்கோட்டின் 16/C ம் இலக்க பராபரிப்புத் தத்துவ வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுகாணி 1956ஞு ஆடி மீ 27 உ வெள்ளிக்கிழமை பிற்பகல் மூன்று மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் தீவுப்பகுதி காரைதீவுக் கோவிற்பற்று வலந்தலை தங்கோடையிறை "முசுட்டைத் தாழ்வு" பர. கி. இல. பத்தொன்பதேகால் (19 1/4) பனைகளும் தென்னைகளும் செய்பயிர் வான்பயிர்களும் வீடும் தலைவாசலும் அடுக்களையும் கிணறும் எல்லை கிழக்கு றேட்டு வடக்கு கையொழுங்கை மேற்கு சின்னக்குட்டி முருகேசுவிற்குரிய வாதனம் தெற்கு ஒழுங்கை. இதிற் சொரியலாய் 3/4 பாகம்.

1956-ம் ஞு ஆனி மீ 28உ

வை. ஏரம்பமூர்த்தி,
கொம்மிஷனர்.
M 319 6-7 (து 500)

## குழப்பக்காரருள் ஒருவர் சர்வகலாசாலை மாணவனும்

கல்லோயாவில் குழப்பம் நடந்தபொழுது நூறுபேருக்கு மேலான தொகையினர் பயங்கர ஆயுதங்களை வைத்திருந்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டது. மட்டக்களப்பு நீதிபதி ஸ்ரீ ஏ. டி. எஸ். சேனரத்தின அவர்கள் அவ்வழக்குகளை விசாரணை செய்து எதிரிகளைக் குற்றவாளிகளெனத் தீர்மானித்தார்.

இவ்வாறு குற்றவாளிகளானோருள் கல்லோயாச் சபை எழுத்தாளர் ஒருவர் கூட்டுறவுப்பகுதிப் பரிசோதகர் ஒருவர். ஒருவர் சர்வகலாசாலை மாணவனும்.

## விளம்பரம்

நாவற்குளி கிராமச் சங்கத தலைவரால் 1956-ம் ஆண்டு ஆடி மாசம் 7-ம் திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் 19-ந் திகதி வியாழக்கிழமை சாயந்தரம் 4 மணி வரை நாவற்குளி சலவைத தொழிலாளர் றேட்டு வேலைக்குரிய போம்கள்பதியப்பட்ட ஒப்பந்தகாரருக்கு ரூபா 50 ஐம்பது கட்டியதின்பேரில் வழங்கப்படும். மேலதிக விஷயம் ஏதும அறிய விரும்பின் கிராமச்சங்கக் கந்தோரில் வந்து அறிந்துகொள்ளலாம்.

இங்ஙனம்
S. Velauther
நா. கிராமச் சங்கத் தலைவர்
M 317 6-7

# ஆதி இலங்கை மக்களும் அரசருப் தமிழரே

—:o:—

1-ம் பக்கத் தொடர்ச்சி

ள்ள தென் ஆபிரிக்க நாட்டில் ஆங்கிலமும் ஆபிரிக்க மொழியும் சமநிலை பெற்றிருக்கின்றன.

இங்கிலையில் மொழிச் சமத்துவம் வழங்குவதில் பெரும்பான்மை சிறுபான்மை என்னும் அர்த்தமற்ற பிரச்சினைகள் எழவேண்டியதில்லை. மனச்சாட்சிக்கு விரோதமான சட்டங்களை நிறைவேற்றிவிட்டு அதனால் ஏற்படும் அவப்பேரை அகற்ற அர்த்தமற்ற சத்தம் போடுவது மனிதப் பண்புக்கு முரணானதாகும். மற்றநாடுகளில் மொழிப் பிரச்சினை எவ்வாறு தீர்க்கப்பட்டது, ஒரே நாட்டில் பலமொழிகள் எப்படி இராசாங்க மொழிகளாக இருக்கின்றன என்பதை ஆராய்ந்து பார்க்காமல் அவசரபுத்தியில் நடந்துகொள்வது அருவருப்பான செய்கையாகும். இதை அடக்குமுறை மனப்பான்மை என்று கூடக் கூறலாம் என்று கூறினர்.

## கொழும்புக்கு அருகே பண்டைத் தமிழர் … … …

2—ம் பக்கத்தொடர்ச்சி

மு தமக்கள் தாழியை சான்றாகுமென்றும் பொருள்படும்படி இலங்கைப் புதைபொருள் ஆராய்ச்சித் துறைத் தலைமை அதிகாரியாகிய டாக்டர் பரணவித்தாரணை கூறியிருக்கின்றார் அவருடைய ஆராச்சியின் உண்மைகளை இலங்கை அரசினர் ஆழ்ந்து கவனித்தால், அவர்கள் இப்போது தமிழர்களுக்கு எதிரிடையாக இயற்றியுள்ள சட்டம் எவ்வளவு நேர்மையற்றது என்று புலப்படும். புராதனச் சான்றாகிய முது மக்கள் தாழியைவிட முற்காலத்தில் சான்றைச் சிங்களவர்கள் காட்ட முடியாது. ஆகையால் வரலாற்றின் உண்மையை அறிந்து புதிய ஆட்சிமொழிச் சட்டத்தின் அநீதியைச் சிங்கள அரசினர் உணரவேண்டுமென்று விரும்புகின்றோம். —தமிழ்நாடு.

# உங்கள் நக்ஷத்திரம்?

எங்கள் சோதிடர்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிபபது.

[ இவ்வாரப் பலன்கள் 8—7—56 —— 14—7—56. ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

உம்முடைய கருமங்கள் பலவற்றில் இந்தவாரம் நன்மையான மாற்றங்கள் நிச்சயம். உம்முடைய இடைஞ்சல்களை நீர் நீக்கிக்கொளளக்கூடியதா யிருக்கும் இலாபங்களும் புகழும் நிச்சயம்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

உம்முடைய முயற்சிகள் விரும்பிய பலனைத் தரமாட்டா. கவனமாயிராது விட்டால் நீர் பழிமொழிக்கு ஆளாக்கப்படக்கூடும். சிறு சுகவீனங்களுக்கிடமுண்டு.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3,

எதையும் செய்து முடிப்பதற்கு முன் உமக்குப் பல இடைஞ்சல்களுண்டாகும். ஆனல் மனம் தளரவேண்டாம். நண்பரும் மேலதிகாரிகளும் உதவியாயிருப்பர். பணநெருக்கடி குறையும்.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்.

உம்முடைய இனத்தவர்கள் சிலருடன் நீர் இந்தவாரம் கோபிக்க வேண்டி வரககூடும். உமக்கு மனச்சமாதானமிருககமாட்டாது. ஆனல் பணத்துறையில் ஒரு அளவுக்கு நல்ல வாரம்.

**சிங்கராசி** மகம், உத்திரம் பூரம் 1ம் பாதம்.

சில ஆரம்ப இடைஞ்சல்களின் பின் நீர் உம்முடைய முயற்சியில் சித்தியடையக்கூடியதாயிருக்கும். போட்டியிடுவோரை வெல்லுதல் நிச்சயம். நீர் நன்மதிப்பும் பெறுவீர்.

**கன்னிராசி** உத்திரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

உம்முடைய துன்பங்களுட் பல நீங்கிவிடும். எதிரிகளை வெல்லுதலும் புதுமுயற்சிகளில் சித்தியும் நிச்சயம். உம்மடையதிட்டங்களை முன்னேற்றுக.

**துலாம்** சித்திரை 3, 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

நீர் சித்தி பெறுதற்கு இந்த வாரம் மிக முயன்றுழைக்கவேண்டும் பொறுப்புகள் கூடுதலாயிருக்கும். மனச்சமாதானமுமிருக்க மாட்டாது ஆனல் பணத்துறையில் ஒரு அளவுக்கு நல்லவாரம்.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

வாரத்தின் முதல்நாள் கவனமாய்க் கழிக்க வேண்டும். ஆபத்துகளுக்கும் சண்டைகளுக்கு மிடமுண்டு. யாருடன் நீர் ஊடாடுகிறீர் என்பதுபற்றி எச்சரிக்கையாயிருக்கவும். பண நெருக்கடிகளுக்கும் பணத்துன்பங்களுக்கு மிடமுண்டு.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம், 1ம் பாதம்.

உம்முடைய சொந்தக் கருமங்களுக்கு முதல்நாள் நல்லதாயிருக்கும். திங்களும் செவ்வாயும் உம்மை அதிகம் வலைக்கும். வார மிகுதி நல்ல பலனைத்தரும்.

**மகராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

புதுக்கருமங்களுக்குமுன் அரைவாரம் நல்லதாயிருக்கும்: காத்திராத சில நல்ல புதினங்களும் எதிரிகளுக்கு அழிவும் நிச்சயம். புதனும் வியாழனும் சில சிறு குழப்பங்களை உண்டாக்கும். வார மிகுதி நல்லதாயிருக்கும்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

முழுதாய்ப் பார்க்கும்பொழுது ஒரு குற்றமில்லாத வாரம். தனலாபமும் புகழும் நிச்சயம். புது முயற்சிகள் மிகவும் சித்தியாகும். வெள்ளி பிற்பகலும் சனியும் அதிகம் நல்லாயிருக்க மாட்டா.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி,

நண்பர்கள் இனத்தவர்களிடமிருந்து இந்த வாரம் நன்மைகள் நிச்சயம். நீர் நன்மதிப்புப் பெறுவீர். உம்முடைய நண்பர் உமக்கு அதிகஉதவியாயிருப்பர், தனலாபமும் நிச்சயம்.

### கோட்டு விற்பனவு விளம்பரம்

சாவகச்சேரி டிஸ்திறிக் கோட்டில் காலஞ்சென்ற கைதடி இராமலிங்கம் ஆறுமுகம் பெண் வள்ளியம்மையின் ஆதனங்கள் விசயமாக காலஞ்சென்றவர் மரணசாதனதத்துவ வழக்கு இல 36 கைதடி பாண்டியர்வேலுப்பிள்ளை மரணசாதன தத்துவகாரன்

சாவகச்சேரி டிஸ்திறிக்கோட்டு மரணசாதன வழக்கு 36-ம் இலகத்தில்எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி கீழ்க்காணப்படும் ஆதனம் 1956-ம் ஞு ஆடி மாதம் 25-ந் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு அககாணிக்குள் நின்று என்னுற் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

ஆதனவிடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி நாவற்குழிக் கோவிற்பற்றுநாவற்குழியிறை தாளைமடல் வயலும் செம்பகவல்லி வயலும் நெ. பர. 308¼ இதில் அரைவாசிக்கு வடக்குப்பக்கமாகநெ.பர154 1/8எல்லை கிழக்கு முத்துக்குமாரசுவாமி கோவிலுக்குரியவாதனம் வடக்கு அப்புக்குட்டி இலங்கையருக்குரிய வாதனம், மேற்கு தம்பு வேலுப்பிள்ளைக்குரிய வாதனம், தெற்கு கார்த்திகேசு சுப்பிரமணியத்துக்குரிய ஆதனம் இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் அதைச் சேர்ந்தவைகளிலும் சொரியலாய் 1/8 பங்கு.

மு. நா. மார்க்கண்டு
கொம்மிஷனர்
சாவகச்சேரி
9 7—1956
M 314 6-7 (து 50)

### கோட்டு விற்பனவு விளம்பரம்

சாவகச்சேரி டிஸ்றிக்கோட்டில் சாவகச்சேரி வல்லிபுரம்பொன்னு வழக்காளி.

எதிர்

இல 1072
(1) நுணுவில் தம்பையா வல்லிபுரமும்
(2) பெண் நாகரத்தினமும.
(3) சாவகச்சேரி P.D. சின்னையா
(4) கோண்டாவில் மேற்கு கே. பூபாலசிங்கமும்
(5) பெண் இரத்தினம்மாவும்
எதிராளிகள்.

சாவகச்சேரி டிஸ்றிக்கோடு 1072ம் இலக்க வழககில் எனக்குக் கிடைதத கட்டளைப்படி பின் குறிக்கப்படுமாதனம் 1956 ம் ஆ ஆவணி மீ 1ந் உ புதன் கிழமை காலை 10 மணி தொடக்கம் அககாணிகருள் நின்று என்னுற் பிரசிதத ஏலததில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை ரூபா 1110/= ம் ரூபா: 750/— க்கு 10-9-55 தொடக்கம் 29-11-55 வரையும் 12 வீத வட்டியும் கூடிவரும தொகைக்கு 30-11-55 தொடக்கம் இறுக்கும்வரைக்கும் 5 வீதவட்டியும் கோட்டுச்செலவு ரூபா 223-63ம் இதில் செலவு வகையால் கொடுபட்ட ரூபா 100/— கழித்து.

ஆதனவிடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி சாவகச்சேரிக் கோவிற்பற்று நுணுவிலிறை கொக்கிருந்த வான் வயல் நெ.பர. 10½ எல்லை கிழக்கு சின்னப்பு தம்பாபிள்ளையினுதனம். வடக்கு சின்னப்பு தம்பா பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய வாதனம். மேற்கு குளமும் வல்லிபுரம் மயில்வாகனத்தினுரிமைக் காரருக்குரிய வாதனமும் தெற்கு காசிப்பிள்ளை சதாசிவத்துக்கும் சகோதரங்களுக்கும் பூலோகசிங்கம் பெண் பொன்னம்மாவின் ஆதனங்களும். பதிவு இல F 264|106.

மு. நா. மார்க்கண்டு,
கொம்மிஷனர்
சாவகச்சேரி
9-7-56.
M 315 6-7 (து 50)

### கோட்டு விற்பனவு விளம்பரம்

இல, MB 313

1. கந்தையா கனகரத்தினம் கந்தர்மடம், வண்கிழக்கு யாழ்ப்பாணம் வழக்காளி,

எதிர்

1 கிறிஸ்ணபிள்ளை துரைசிங்கம்
2 பெண் ஈசுபரியம்மா நல்லூர் - யாழ்ப்பாணம்,
எதிராளி,

யாழ்ப்பாணம் பெரிய கோட்டின் MB 313 ம் இலக்கவழக்கில் எனக்குக கிடைதத கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக்காணிகள் 1956 ஞு ஆவணி மீ 25உ சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடககம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

காணி விபரம்

யாழ்ப்பாணம் நல்லூரில் 'கயிலாயஉடையான்வளவு' என்னும் காணி ௲. இ. 4 5/48 பயிர்களும் கிழக்கெல்லைக்காணியில் கிழக்கு எல்லையில் இருக்கும் கிணற்றில் பங்கும் இந்த இரண்டு காணிககு ஊடாக வளிவாய்க்காலும் மற்றும் அதற்கு சேர்ந்தவைகளும்.

எல்லை வடக்கு ஒழுங்கை.
கிழக்கு சண்முகம்பிள்ளை பெண் ராசம்மாவின் ஆதனம்.
தெற்கு ரோட்டு
மேற்கு கை ஒழுங்கை
இவை அடங்கிலும்.

(2) யாழ்ப்பாணம் கோப்பாய் தெற்கில் "களுகருயன் வயல்" என்னும் காணி இரண்டுபிரிவுகள் நெ, இ. 15,

எல்லை கிழக்கு விசுவனுதர் வேலுப்பிள்ளையின் உருத்தாளரின் ஆதனம்.

தெற்கு செல்லப்பா கணபதிப் பிள்ளையின் ஆதனமும்.
கனகசபை கைம்பெண் சொர்ணம்மாவின் ஆதனமும்.

மேற்கு நல்லூர் கிராமஎல்லை,
வடக்கு செல்லப்பா கணபதிப் பிள்ளையின் ஆதனம்.
இவை அடங்கிலும்.

வ. அ. துரையப்பா,
கொமிஷனர்.
யாழ்ப்பாணம்
1-7-56.
M. 313. 6-7- து. 100

### கோட்டு விற்பனவு விளம்பரம்

—0—

சாவகச்சேரி டிஸ்திறிக்கோட்டில் மட்டுவில் வடக்கு தம்பிஐயா கைம்பெண் சின்னம்மா
— வழக்காளி

எதிர்

இல 1071

மட்டுவில் வடகசு பொன்னையா கனகசபாபதி
— எதிராளி

சாவகச்சேரி டிஸ்திறிக் கோட்டால் 1071 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கட்டளைப் பிரகாரம், 1956-ம் ஆ ஆவணிமீ 4 உ சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் கீழ்க்குறிக்கப்படும் ஆதனங்கள் அவ்வக் காணிகட்குள் நின்று என்னுற் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை ரூபா 803-ம் 10 9 55 தொடக்கம் 15.11 55 வரைக்கும் ரூபா 500க்கு 9 வீத வட்டியும் கூடிவரும் தொகைக்கு 16-11-55 தொடக்கம் இறுக்கும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 165-90½.

ஆதன விபரம்

1 வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி சாவகச்சேரிக் கோவிற்பற்று மட்டுவில் வடக்கு இறை தந்திய வளவும் மறு பிரிவுகளும் கி, பர. 15½ இதில் மேற்குப்பககமாக கி. பர. 5 குளி 9½ குழுக்களாய் வளவு கி. பர 2 இவை இப்போ ஒரு ஆதனமாக கி. பர, 7 குழி 9 1/2 இதில் கில. பர. 5 குழி 9 1/2 எல்லை கிழக்கு சபாபதி செல்லப்பாவுக்குரிய வாதனம் வடக்கு கழிவிடப்பட்ட எதிரியினுதனம் மேற்கு கணபதி சரவணைபெண் சின்னம்மாவின் ஆதனம், தெற்கு எதிரியினுதனம் இதடக்கலும் இதைச் சேர்ந்தவைகளைத்தும்

2 ஷெ மட்டுவிலிறை முக்கச் சிக்கிராயன் வயல் 4 ஏக்கர் 33 பேட்சு இதில் நெ. ப. 11 இதில் தெற்குப் பக்கமாக நெ ப. 9ல் தெற்குப் பக்கமாக நெ. ப. 5 எல்லை கிழக்கு பொன்னுத்துரை பெண் சிவஞானம்மாவினுதனம், வடக்கு கழிவிடப்பட்ட எதிரியினுதனம், மேற்கு நாகமுத்து கந்தையாவினுதனம். தெற்கு காலஞ்சென்ற நாகலிங்கத்தின் பிள்ளைகட்குரிய வாதனம் இவ்வெல்லைக்குட்பட்ட வயல் நிலமடங்கலும்.

மு நா. மார்க்கண்டு
கொம்மிஷனர்
சாவகச்சேரி
10—7—56.
M 316 6-7 (து 50)

### கோட்டு விற்பனவு விளம்பரம்

தற்போது கொழும்பிலிருக்கும்
1 உடுவில் பொன்னுததுரை நரேந்திரநாதனும்
2 பெண் ஜனனுயகியும் வழக்காளிகள்

இல 10538

எதிராக

சரவணை
1 சிதம்பரப்பிள்ளை துரையப்பா
2 விசுவலிங்கம் கந்தசாமியும்
3 பெண் விசாலாட்சியும்
எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 10538ம் இலக்க வழக்கில் எனககுக் கிடைதத கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் மூன்று துண்டுக் காணிகள் 1956 ஞு புரட்டாதி மாதம் 8 உ சனிககிழமை முற்பகல் 10 மணி தொடககம் அந்தந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணிகள் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறை கோவிற்பற்று சரவணை இறை கிருஞ்சி வேலடி, கிருஞ்சி மேற்லன் வேலடி, கிருஞ்சி பள்ளம், பெருமாள் பள்ளம் பர கி. இ 15ம், பயிர்வகைகளும் எல்லை கிழக்கும், வடக்கும் கணபதியார் தம்புவின் ஆதனம், மேற்கு சபாபதி பெண் சின்னப்பிள்ளையின் ஆதனம் தெற்கு குளம், இதடங்கலும் C 222 10 ம் புத்தகத்தில் பதியப்பட்டிருக்கிறது

ஷெ சரவணையிறை 'பிறணசீமா' பர கி. இ 9ம் எல்லை கிழக்கு, மேற்கு, தெற்கு முருகன் கந்தையாவின் ஆதனம். வடக்கு தில்லையம்பலம் பெண் இராசம்மாவின் உருத்தாளரின் ஆதனம், இதடங்கலும் C 221/260 ம் புத்தகத்தில் பதியப்பட்டிருக்கிறது.

ஷெ சரவணை இறை மண்ணினபுலம் பர கி இ. 5ம் 13½ குளியும். கல்வீடும், குசினியும் தென்னை, பனை, பயிர்வகைகளும் எல்லைகிழக்கு ஒழுங்கை, வடக்கு கனகசபை பெண் செல்லம்மாவின் ஆதனம் மேற்கு ராஜா பெண் இராசம்மாவின் ஆதனம், தெற்கு செல்லப்பாபெண் கமலத்தின் ஆதனம். இதடங்கலும் C 219 298 ம் புத்தகத்தில் பதியப்பட்டிருக்கிறது.

சே. இரத்தினசபாபதி,
கொமிஷனர.
51, 4-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்
28-6-56.
M 310 6-7 (து 200)

# பொய்யை மெய்யாக நினைத்த பேதைமை

2-ம் பக்கத்தொடர்ச்சி

மென்று நீர் கற்ற எந்த நூலாயினும் கூறுகின்றதோ? என்று நகையாடினூர்கள். அத்தீமொழியைக் கேட்டதும் மெல்லியல் வாய்ந்த கண்ணகி நடுங்கிய வண்ணம் தன் செவிகளைப் பொத்திக்கொண்டு கோவலன் முன்னே கலங்கினின்ருள். அதைக் கேட்ட கவுந்தியடிகள் கோபித்து "நீவிர் இருவரும் இம் முள்ளுடைக் காட்டில் முதுநரியாகுக" என்று சபித்தார். அக்கணமே அவ்விருவரும் நரியாகி நீண்ட குரலோடு ஊளையிட்டனர். அதைக் கேட்ட கோவலனும் கண்ணகியும் அவர்கள் மேல் இரங்கி அடிகளைப்பார்த்து

"நெறியின் நீங்கியோர் நீரல கூறினும்
அறியாயாமை யென்று அறியல் வேண்டும்
செய்தவத்தீர் நும் திருமுன் பிழைத்தோற்கு
உய்திக்காலம் உரையீரோ"
— சிலப்பதிகாரம்

என்று கூறினூர்கள். அடிகளும் அன்பர் வேண்டுகோளுக்கிணங்கி சாப விடை செய்தார். பின்னர் மூவரும் நடந்து மாலைப்பொழுதில் உறையூரின் கண் வந்து சேர்ந்தார்கள். அவ்விடமொரு நாளிருந்து பொழுது புலருமுன்னமே உறையூரைவிட்டகன்று தென திசையை நோக்கிச் சென்ருர்கள். அப்பொழுது பாண்டியன் கீர்த்திகளை யெல்லாம் பாடிக்கொண்டு ஒருபிராமணன் அவ்வழியே வந்தான். அவனைக் கண்டு மதுரைக்குப் போகும் வழியையும் கேட்டு அப்பால் ஏகினுர்கள். போகும்போது பலரைக் கண்டு பேசியும் பல சிறப்புக்களைப் பார்த்தும் வழிகளைக் கேட்டும் காடுகளையும் ஊர்களையும் கடந்து வைகை யாற்றையுங் கடந்து மதுரைமா நகர்க் கண் மையிலுள்ள முனிவர் வதியும் மடத்திலே தங்கினுர்கள்.

மறுநாட் காலை கோவலன் கவுந்தியடிகளைக் கை கூப்பி வணங்கி "மாதவப் பெரியோய்! ஒழுக்கத்திலிருந்து தவறினவர்போல என்னிருப்பிடத்தையும் நைவிட்டு கனவிலும் நினைத்தறியாத காடுவனமெல்லாம் நடந்து துன்பமுற்றுச் சிறுமை பெற்றேன். இம் மாநகரில் போய் இடம் பார்த்து வருமளவும் என் காதலியைக் காத்தருள வேண்டும்" என்ருன். அவன் நிலையைக் கவுந்தியுமறிந்து இரக்கத்தோடு கூறினர். "அன்பனே நீ ஏன் வருந்துகின்ருய்? நூலறிவினையுடைய பெரியோர் தீவினைப் பயனுகிய துன்பத்தை நுகரும் பொழுது மனம் வருத்தமடையார்கள். உன்னைப்போல முன் துன்பமடைந்தோர் உலகிற் பலர். அயோத்திமாநகர்க் கரசனுயிருந்த ஸ்ரீ இராமச்சந்திரன் 'தந்தை சொன் மிக்க மந்திரமில்லை என்றவாறு காதலியாகிய சீதையோடு காட்டுக்குச் சென்று அங்கே சிலம் மிகுந்த சீதையை இழந்து துயர்களெல்லாம் அநுபவிக்கவில்லையா? இன்னும் நிடதநாட்டரசனுகிய நளனும் மனைவியோடு கடுங் கானகம் சேர்ந்து சணக்கில்லாத துயர்களை அநுபவிக்கவில்லையா? என்று சொல்லி கவுந்தியடிகள் கோவலனைத் தேற்றினுர். அடிகளது அருள் மொழியால் ஒருவாறு தேறிய கோவலன மதுரைநகருள் சென்று இடமும் பார்த்துத் திரும்பினுன்.

... ... ... ... .... .... (வளரும்)

### கோட்டு விற்பனவு விளம்பரம்

வண்ணுர்பண்ணை கிளக்கு இராமப்பிள்ளை, இராசையா கைம்பெண் கனகம்மா
வழக்காளி

இல. 11464

எதிராக

(1) நாவாந்துறை ரோட் மொகமது மொகிடீன் மொகமெட் யூசோவ்

(2 தெல்லிப்பளை மயிலிட்டி தெற்கு வயித்திலிங்கம் கந்தையாவும் பெண்
(3) நாகம்மாவும்

எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் 11464ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைதத கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1956ஞு புரட்டாதிமீ 6உ வியாளக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில விற்கப்படும்.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வண்ணுர்பண்ணைக் கோவிற்பற்று வண்ணுர்பண்ணை மேற்கு இறை "புங்கடி" பர. கி. இ. 17/8 ம், கல்வீடும் செய் பயிர்களும் அங்கு இருககும் கிணற்றில் பங்கும் எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு பக்கீர் பாவா மீஸ்கினின் உருத்தாளருடைய ஆதனம். மேற்கு தண்ணீர் ஓடும் வாய்க்கால். தெற்கு மீரு சைகிப் காசிம் மொகிடீனும் மொகமெற் சுல்தான் பெண் காடெர் பிபியினுடைய ஆதனம் இதடக்கலும்,

செ. இரத்தினசபாபதி,
கொம்மிஷனர்.
51, 4ம் குறுக்குத் தெரு
யாழ்ப்பாணம்
28-6-56
M 311 6-7-56. (து. 200)

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணுர்பண்ணை காங்கேசன் துறை வீதி 450 ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி 245 ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. சப்பையா பொன்னைபலம் கந்தையா அவர்களால் 6 7-56 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.